**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 178/2004**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 09.01.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : தமிழரசி Father's Name : சுப்ரமணி

துவக்க நேரம்: 01.00 P.M

<u>4ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>

1. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.23-ல் கூறப்பட்டுள்ள சொத்துக்களுக்கும், இவ்வழக்கு சொத்துக்களுக்கும் தொடர்பு இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.24 தொடர்பான மனு ரசீதோ, முதல் தகவலறிக்கையோ தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான், புகார் மட்டும்தான் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணத்தில் கூறப்பட்டுள்ள அரசு புறம்போக்கு நிலத்திற்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

2. வா.சா.ஆ.25-ல் எனது கணவர் பெயர் பாலசுப்ரமணியம் என்றும், அவரது வயது 10 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இந்த ஆவணம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. நான் இந்த ஆவணத்தை இதற்கு முன்பு பார்த்ததில்லை. மேற்படி ஆவணத்தை பற்றி ஒப்புக்கொண்டால் எனது வழக்கிற்கு எதிராக அமையும் என்பதால் அவ்வாறு கூறுகிறேன் என்றால் சரியல்ல.

Typed by Tmt.L.Kalaiselvi- O.S. No.178/2004 , Dt. 09.01.2026.

3. 7-ஆம் பிரதிவாதி பார்வதியம்மாளுக்கும், எனது கணவர் சுப்ரமணியன், எனக்கும் எவ்வித விரோதமும் இல்லையென்றால் சரிதான். வா.சா.ஆ.27, 28 ஆகிய ஆவணங்களில் சீனன் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு சொத்துக்களான ச.எண்கள்.134/1, 132/7, 142 தொடர்பாக வேறு பாகம் கோரும் வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. நான் சொல்வது தவறு என்றாலும், மேற்கண்ட சொத்துக்கள் தொடர்பாக அசல் வழக்கு எண். 338/2017 என்ற வழக்கு எங்களுக்கும், பிரதிவாதி பார்வதியம்மாள், சுந்தராம்பாள், ராஜ்குமார் ஆகியோர்களுக்கு இடையே கூடுதல் மாவட்ட நீதிமன்றம் எண்.1, சேலம் -ல் நடைபெற்று 04.04.2019 தேதியில் வழக்கின் தரப்பினர்கள் சமரசம் செய்து கொண்டதன் அடிப்படையில் தீர்வு வழங்கப்பட்டுள்ளது என்றால் இந்த வழக்கு சொத்துக்களுக்கும், மேற்படி வழக்கு சொத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை. இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் இவ்வழக்கை மறைத்து மேற்படி வழக்கில் தீர்வு பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல என்றாலும், இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

4ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பு மறு விசாரணை இல்லை.

முடிவு நேரம்: 01.15 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/- D. JansiRani,
Additional District Munsif, Attur

Typed by Tmt.L.Kalaiselvi- O.S. No.178/2004 , Dt. 09.01.2026.